

சாத்தூர் பகுதியில் உள்ள பா.லட்சுமியாபுரத்தில் கனிம வள நிதியில் ரூ.30லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட மேல் நிலை தண்ணீர் தேக்க தொட்டியை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் கனகராஜ், நகர்மன்ற தலைவர் குருசாமி, முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் நிர்மலாகடற்கரைராஜ், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன்,கடற்கரைராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சன்முகப்பிரியா, ரவி ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக அமைச்சர் பாப்பாகுடியில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.




திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரியாம்பட்டி, கள்ளிமந்தயம் உள்ளிட்ட ஊராட்சிகளுக்கான 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் கலந்துகொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளும் சீரான வளர்ச்சி பெறவே எல்லோருக்கும் எல்லாம் என்ற தாரக மந்திரத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார் என பேசினார். நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் தாஹிரா, மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர்கள் பி.சி. தங்கம், பொன்ராஜ், சுப்ரமணி, பொதுக்குழு உறுப்பினர் தங்கராஜ் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜேஷ், கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.படம். திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தயத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் .பி.மூர்த்தி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் நேற்று (20.09.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தோட்டக்கலை துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலைத் இயக்கத்தின் கீழ் 90 பயனாளிகளுக்கு நடமாடும் காய்கனிகள் மற்றும் பழங்கள் விற்பனை வண்டிகளை வழங்கினார். மதுரை மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பாக தேசிய தோட்டக்கலைத் இயக்கத்தின் கீழ் நடமாடும் காய்கனிகள் விற்பனை வண்டிகள் வழங்குவதற்கு 2025–26 ஆம் ஆண்டிற்கு 300 எண்கள் இலக்கீடு பெறப்பட்டு, அனைத்து வட்டாரங்களிலும் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 90 பயனாளிகளுக்கு ரூ.15,000 வீதம் ரூ13.50 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் காய்கனிகள் விற்பனை வண்டிகள் வழங்கப்பட்டது.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் .பி.மூர்த்தி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் .கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் ஒத்தக் கடை அருகில் தூய்மை தமிழ்நாடு நிறுவனம், தூய்மை இயக்கம் 2.0 திட்டம் சார்பில் மாபெரும் கழிவு சேகரிப்பு இயக்கத்தின் கீழ் மாபெரும் தூய்மை செய்யும் பணியினை துவக்கி வைத்தார்.

### 'ஆழ்கடலிலும் ஆராயப்படும் தமிழர் வரலாறு!'

# நம் பாரம்பரியத்தை உலகறியச் செய்யும் நமது முதல்வரின் ஈடுபாட்டிற்கு - இந்த ஆய்வுகள் சான்று!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!

**சென்னை, செப். 21-**

**ஆழ்கடலிலும் ஆராயப்படு கிறது தமிழர் வரலாறு. நம் பாராம் பரியத்தை உலகறியச் செய்யும் நமது முதல்வர் அவர்களின் ஈடுபாட்டிற்கு இந்த ஆய்வுகள் ஒரு சான்று என்று அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

அவரது வலைதளப் பதிவு வருமாறு: –



மூவேந்தர் காலத்திலும், சங்க இலக்கியத்திலும், சங்ககாலத்திற்கும் பின்னான காப்பியங்களிலும் சிறப்பித்துக் கூறப்படும் மிகப்பெரும் கடல் வாணிபத் துறைமுகமாக இருந்த காவிரிப்பூம்பட்டினம் என்றழைக்கப்பட்ட இன்றைய மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள "பூம்புகாரில்" , பழந்தமிழ் நாகரிகத்தின் தொன்மையை கண்டுணர்ந்து ஆராயும் பொருட்டு, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கடலுக்கு அடியில் ஆய்வுகள் மேற்கொள்ளும் இப்பணியினை பேராசிரியர் கே.ராஜன் தலைமை யில், தொல்லியல் துறை இணை இயக்குநர் சிவானந்தம் அவர்களை உள்ளடக்கிய வல்லுநர் குழு தொடங்கியுள்ளது.

பழந்தமிழர்களின் தொன்மையை வெளிக்கொணர்வதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கும், நம் பாரம்பரியத்தை உலகறியச் செய்வதில் அவரது ஈடுபாட்டிற்கும், இந்த ஆய்வுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்—

# 'சொல் புதிது' எனும் திட்டத்தின்கீழ் 5வது கூட்டம்!

## முனைவர் ம.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, செப். 21- தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் 'சொல் புதிது' என்னும் திட்டத்தின் ஐந்தாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 17.09.2025 முற்பகல் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார்.*

*இக்கூட்டத்தில் சிவாலயம் ஜெ. மோகன், பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், ஒப்பிலா மதிவாணன், பாரதிபாலன், சா. சரவணன், ஆ. மணவழகன், ம. இளங்கோவன், மற்றும் ராஜ் கண்ணன், மு. முருகேசன், முனைவர் அ. ஜேம்ஸ், ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் 54 சொற்கள் முடிவு செய்யப்பெற்றன.*

*1 ANPR camera-ஊர்தி எண் காணி, 2 Badge-அடையாள வில்லை , 3 CCTV camera - கண் காணி, 4 DSLR camera - எதிரொளிப் படக்கருவி, 5 Hawala- முறையிலாப் பரிமாற்றம், 6 Hot news- பரபரப்புச் செய்தி, 7 Infotainment - தகவல் போக்கு,8 Life style -வாழ்முறை, 9 Sport-தனி விளையாட்டு, 10. Game-விளையாட்டு / ஆட்டம்,*

*11.Match-போட்டி விளையாட்டு, 12. Tournament-காலநிலை விளையாட்டு, 13. Winner -வெற்றியாளர், 14 Runner -வெற்றி அண்மையர், 15 Champion -வாகையர், 16 Championship -வாகை நிலை,*

*17 Client-பயனி, 18 Customer-வாடிக்கையாளர், 19 Biopic-வாழ்க்கைப் படம், 20 Caravan vehicle-வசதி நிறை வண்டி, 21 Bonanza- அதிரடிப் பயன் 22 Trendy- புதுப்போக்கு, 23 Trendsetter - புதுப் போக்கு ஆக்குநர், 24 Chip -சில்லு, 25 Remake-மறு ஆக்கம், 26 Rubber stamp-ஒப்ப முத்திரை, 27 Real estate -நில வணிகம், 28 Grease- மசகு, 29 Dose-கண்டிப்பு, 30 Timeline-கால வரிசை, 31 First look-முதல் நோக்கு, 32 Lyric video-பாடல்வரிக் காட்சி, 33 First single-முதல் பாடல், 34 Gated community-காப்புக் குடியிருப்பு, 35 Academy-கலைக்கழகம்,*

*36 Cartoon-கருத்துப்படம், 37 Hydro carbon-ஆழ் நிலை நீர்மக் கரிமம், 38 Screen shot-திரைப் பதிவுப் படி, 39 Bumper prize-மாபெரும் பரிசு, 40 CAPTCHA-ஆளறிகுறி,*

*41 Showcase -காட்சிப் பேழை, 42 Biomining-நுண்ணுயிரி அகழ்வு, 43 Metacognition-மீ அறிதிறன், 44 QR code-விரைவு வினைக்குறி,*

*45 Hologram-முப்பரிமாண ஒளிப்படம், 46 Bonhomie-நற்பண்பு,47Omelette-முட்டை அடை, 48 Half boiled egg-முட்டை அப்பம், 49 Fried rice-பொரி சோறு, 50 Heartin Idly-இதய வடிவ இட்லி, 51 Tetra pack- நாலடுக்குப் பொதி / நாலடுக்குக் கட்டகம்,52 Risk-இடர், 53 Rusk-உலர் ரொட்டி, 54 Chain smoker -தொடர் புகையர்*

*இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் கோ. சண்முகம்

### செப்டம்பர் 21 (2002)



**திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா. மீனாட்சிசுந்தரம்

### செப்டம்பர் 21 (2020)



**1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.**

**1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "மா.மீ" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். "எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**